# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

<u>அ.வ எண்: 20/2012 கற்பகவள்ளி (பிசா 4) தேதி: 18.02.2026.</u>

<u>பிசா. 4 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 10 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

இந்த வழக்கில் காலம் சென்ற எனது தந்தை 16 ம் பிரதிவாதி என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். OS No. 47/2015 வழக்கில் எனது தந்தை என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமும் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். இந்த வழக்கின் பிராது மற்றம் கோரப்பட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் வாதி மற்றும் இதர பிரதிவிதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனதுதந்தை தாக்கல் செய்த நிருபண வாக்குமூலம் மற்றும் குறியீடு செய்த ஆவணங்கள் பி.சா.ஆ.30 முதல் பி.சா.ஆ.33, மற்றும் பி.சா.ஆ.34, பி.சா.ஆ.35 ஆவணங்கள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் பி.சா.ஆ.30 முதல் பி.சா.ஆ.33 பற்றி எனக்கு தெரியும். எனது தந்தை 2023 ம் வருடம் பட்டா பெயர் மாற்றம் கோரி மனு கொடுத்து அது அனுமதிக்கப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ள ஆவணம் தான் பி.சா.ஆ.34, 35 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> 10 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.